**தலைப்பு 276 – பதுளை மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை மாவட்டச் செயலகத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தி முதல் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1. மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்**

---

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (அ) | மஹியங்கணை | (ஊ) | பதுளை | (ஓ) | பண்டாரவளை |
| (ஆ) | ரிதிமாலியத்த | (எ) | பசறை | (ஔ) | ஹப்புதளை |
| (இ) | கந்தகெட்டிய | (ஏ) | லுணுகல | (க) | ஹல்துமுள்ள |
| (ஈ) | மீகஹகிவுல | (ஐ) | ஹாலிஎல | (கா) | வெலிமட |
| (உ) | சொரணாதொட | (ஒ) | எல்ல | (கி) | ஊவாபரணகம |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

பதுளை மாவட்டச் செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 மே 20 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்தநிதி ஏற்பாடும் செலவினமும்**

பதுளை மாவட்டச் செயலகத்திற்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 744 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 604 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் பதுளை மாவட்டச் செயலகத்தின் தேறிய நிதி ஏற்பாடுகளில் சேமிப்பு ரூபா 140 மில்லியன் அதாவது 19 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | சேமிப்புக்கள் தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 486 | 476 | 10 | 02 |
| மூலதன | 258 | 128 | 130 | 50 |
| மொத்தம் | **744** | **604** | **140** | 19 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 22 அமைச்சுக்களிலிருந்தும் 17 திணைக்களங்களிலிருந்தும் மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 3,411 மில்லியன் தொகையும் ரூபா 714 மில்லியன் தொகையுமாக ரூபா 4,125 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதிஏற்பாடுகளிலிருந்து முறையே ரூபா 2,694 மில்லியன் தொகையும் ரூபா 704 மில்லியன் தொகையுமாக ரூபா 3,398 மில்லியன் கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டில் முறையே ரூபா 717 மில்லியன் மற்றும் ரூபா 10 மில்லியன் தொகையுமாக ரூபா 727 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

பதுளை மாவட்டச் செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 27601 | 44 | 39 | 28 | 29 | 146 | 132 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

பதுளை மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 294,331 ஆகக் காணப்பட்டது.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

பதுளை மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 600 மில்லியனாக இருந்தது.

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், பதுளை மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 3. தலைப்பு 276 – பதுளை மாவட்டச் செயலகம்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | மஹியங்கணை மற்றும் சொரணாதொட பிரதேச செயலகங்களினால் பேணப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| பொது வைப்பு சமப்படுத்தல் கணக்கு | நிதிப் பிரமாணம் 565(3) | ஹல்துமுள்ள பிரதேச செயலகத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| அலுவலக தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

பதுளை மாவட்ட செயலகத்திற்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட 36 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிராததுடன் அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 233,627,230 ஆகும்.

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.3.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவின விடயமொன்றிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 90,000,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 03 செலவின விடயங்களுக்காக மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 20 சதவீதம் முதல் 39 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 3.3.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகள்

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

மீளாய்வாண்டின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 3,061 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், மாவட்டச் செயலகத்தினால் அதில் ரூபா 2,377 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து ரூபா 683 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. மாவட்டச் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட அவற்றின் மீதான பயன்படுத்தல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை அடிப்படையாகக் கொண்ட விஷேட நிகழ்ச்சித்திட்டம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

* ஊவாபரணகம பிரதேச செயலகத்தின் பரணகம பிரிவில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை அடிப்படையாகக் கொண்டு திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் களிமண் பதப்படுத்தும் இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பெயரில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி எழுதப்பட்டிருந்த ரூபா 479,494 பெறுமதியான காசோலை 2014 ஆகஸ்ட் 26 ஆந் திகதி வரையிலும் விடயப்பொறுப்பு உத்தியோகத்தரின் பொறுப்பில் காணப்பட்டது.

* 2013 திசெம்பர் 31 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 245,700 பெறுமதியான 182 கூரைத் தகரங்கள் பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் பாதுகாப்பற்ற வகையில் பரணகம பிரிவில் தனியார் வீடொன்றில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. 2013

திசெம்பர் மாதம் அளவில் நலனாளிகள் கூடாரங்களை நிர்மாணித்திருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2014 ஆகஸ்ட் 25 ஆந் திகதியிலும் கூட கூரைத் தகரங்கள் வழங்கப்படாமையினால் அவை துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது. பயனாளிகளினால் இது தொடர்பாக பிரதேச செயலாளருக்கும் உரிய உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தை அமுல்படுத்தும் கால அட்டவணையொன்று செயற்திட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், காலப்பகுதியில் எதிர்பார்த்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் போலியான நிதி முன்னேற்றம் காண்பிக்கப்பட்டிருந்தது.

- 2013 திசெம்பர் மாதத்தில் ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்ட இந்த செயற்திட்டம் 2014 ஆகஸ்ட் மாதம் வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ஊவாபரணகம பிரதேச செயலகப் பிரிவில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை கட்டியெழுப்பும் நோக்கில் அமுல்படுத்தப்பட்ட இந்த செயற்திட்டத்தின் எதிர்பார்த்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்கும் முடியாதிருந்தது.

(ii) மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது சரியான விலை வீதம் மற்றும் அளவுகளை பிரயோகிக்காமை

---

2014 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட 27 அபிவிருத்தி செயற்திட்டங்களின் மதிப்பீட்டைப் பரீட்சிக்கும் போது 1:2:4 (19 மி.மீ) கொங்கிரீட்டு கலவைக்காக ¾ அங்குல அளவில் ஒவ்வொரு 0.9 கல் கியூப்பிற்காகவும் 0.1 கியூப் கல்லிற்கு மேலதிக போக்குவரத்துக் கிரயம் உள்ளடக்கப்பட்டமையினால் உரிய ஒப்பந்தக்காரருக்கு ரூபா 169,330 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) போலியான அளவீட்டின் அடிப்படையில் கொடுப்பனவு செய்தமை

------------------------------------------------------------------------------------------------------------

03 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக போலியான அளவீட்டின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டடையினால் ரூபா 247,068 தொகை உரிய உடன்படிக்கை செய்யப்பட்ட சங்கங்களுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) லுணுகல பிரதேச செயலகம்

-----------------------------------------------

லுணுகல பிரதேச செயலகத்தினால் 2014 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களிற்கான சீமெந்து போக்குவரத்துக் கிரயத்திற்கான மதிப்பீட்டினை மேற்கொள்ளும் போது ஏற்றி, இறக்கும் கட்டணங்கள் உள்ளடக்கப்பட்டு HSR வீதமொன்று பிரயோகிக்கப்பட்டு மீளவும் அதில் ஏற்றி, இறக்கும் கட்டணங்களை உள்ளடக்கி போக்குவரத்துக் கிரயம் மதிப்பிடப்பட்டிருந்தது. மணல் போக்குவரத்துக் கிரயத்திற்கான மதிப்பீட்டினை தயாரிக்கும் போது இறக்கும் கட்டணம் உள்ளடக்கப்படாத HSR வீதம் பயன்படுத்தப்பட்டு மதிப்பிடப்பட்டிருந்ததுடன் அதற்கு மாவட்ட விலைக் குழுவினால் இறக்கல் கட்டணங்கள் உள்ளடக்கப்பட்டு போக்குவரத்துக் கிரயம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக 06 செயற்திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையில் ரூபா 60,904 தொகை உரிய ஒப்பந்தக்காரர்களுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(v) ஊவாபரணகம பிரதேச செயலகம்

---------------------------------------------------------

ஹன்தானன்கொட கிராமம் ஊடாக வீதிக்கு கொங்கிரீட் சிறு கற்கள் இடும் செயற்திட்டத்தின் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 965,019 ஆகக் காணப்பட்டது. அந்த செயற்திட்டத்திற்குரிய கோவைகள் மற்றும் களச் சம்பவக் குறிப்புக்கள் முறையாக நாளதுவரையாக்கப்படாதிருந்ததுடன் களக் குறிப்புப் புத்தகத்தில் பதியப்பட்ட குறிப்புக்கள் பிழையாக இருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(vi) சறை பிரதேச செயலகம்

------------------------------------------------

சறை பிரதேச செயலகத்தினால் 2014 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட 03 அபிவிருத்தி செயற்திட்டங்களின் மதிப்பீட்டை பரீட்சித்த போது 1:2:4 (19 மி.மீ) கொங்கிரீட் கலவைக்காக சரியான விலை வீதம் (STI – 047) பயன்படுத்தப்படாமையினால் உரிய ஒப்பந்தக்காரருக்கு ரூபா 37,722 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

**3.4 பொது வைப்புக் கணக்கு**

------------------------------------------

02 வருடங்களை விஞ்சிய ரூபா 187,064,900 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

**3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

------------------------------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் படி, அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,324,273 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 21 வருடங்கள் வரையிலான கால வீச்சுக்காக முன் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்த நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு மாவட்ட செயலகம் தவறியிருந்தது.

**3.6 இணங்காமைகள்**

--------------------------

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமைகள்**

------------------------------------------------------------------------------------------------------------------------------------

மஹியங்கணை பிரதேச செயலகத்தினால் குழாம் வாகனத்திற்கு ரூபா 222,179 பெறுமதியான 1,873 லீற்றர் டீசல் பயன்படுத்தப்பட்டு வாகனம் ஓடப்பட்டிருந்த போதிலும் நிதிப்பிரமாணம் 1646 இன் பிரகாரம் நாளாந்த ஓட்ட அட்டவணைகள்க மற்றும் மாதாந்த பொழிப்புள் அறிக்கை எழுதப்பட்டிருக்கவில்லை.

**3.7 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்**

--------------------------------------------------------------------------------------------------------------

செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டமை மற்றும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல்

---

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 4,870,330 தொகையான 07 செயற்திட்டங்கள் 2014 ஒக்தோபர் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையான காலவீச்சின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையில் அந்த செயற்திட்டங்களுக்காக ரூபா 884,842 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

---

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் பிரதேச செயலகங்களின் கீழ் 108 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் பல்வேறு காரணங்களினால் அந்த செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | பிரதேச செயலகம் | செயற்திட்டங் களின் எண்ணிக்கை | மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதி | 2014.12.31 ஆந் திகதி வரையில் செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா | | ரூபா | |
| (i) | கந்தகெட்டிய பிரதேச செயலகம் | 03 | 4,388,426 | 2014 ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை | 1,600,000 | மோசமான காலநிலை |
| (ii) | ஊவாபரணகம பிரதேச செயலகம் | 13 | 10,215,175 | 2014 ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரை | 1,600,000 | மோசமான காலநிலை மற்றும் காலம் போதாமை |
| (iii) | சறை பிரதேச செயலகம் | 16 | 9,876,160 | 2014 மே முதல் திசெம்பர் வரை | 1,368,802 | மோசமான காலநிலை, காலம் போதாமை, உரிய நிறுவனங்களிலிருந்து அங்கீகாரம் பெறல், மதிப்பீடுகளின் மீளாய்வு |
| (iv) | ஹப்புதளை பிரதேச செயலகம் | 03 | 24,302,608 | 2014 செப்தெம்பர் முதல் திசெம்பர் வரை | 5,242,701 | மோசமான காலநிலை, எதிர்ப்பு காணப்பட்டமை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (v) | பண்டாரவளை பிரதேச செயலகம் | 14 | 14,993,644 | 2014 மே முதல் திசெம்பர் வரை | 10,274,661 | மோசமான காலநிலை |
| (vi) | மஹியங்கணை பிரதேச செயலகம் | 32 | 23,452,626 | 2014 ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரை | 6,970,232 | மோசமான காலநிலை மற்றும் காலம் போதாமை |
| (vii) | லுணுகல பிரதேச செயலகம் | 16 | 6,968,599 | 2014 ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரை | 6,498,499 | மோசமான காலநிலை மற்றும் காலம் போதாமை |
| (viii) | வெலிமடை பிரதேச செயலகம் | 04 | 3,845,583 | 2014 நவம்பர் மற்றும் திசெம்பர் | 1,259,385 | மோசமான காலநிலை |
| (ix) | ரிதிமாலியத்த பிரதேச செயலகம் | 07 | 7,145,053 | 2014 யூலை முதல் நவம்பர் வரை | 1,311,028 | மோசமான காலநிலை |

### 3.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

பதுளை பிரதேச செயலாளர் நிரந்தர பதவியின் உள்ளபடியான கடமைகளையும் பஸ்ஸறை பிரதேச செயலாளர் பதவியின் பதில் கடமைகளையும் நிறைவேற்றும் பொருட்டு பதுளை பிரதேச செயலாளரினால் இரண்டு செயலகங்களினதும் உத்தியோகபூர்வ வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 04 மாதங்களுக்காக இரண்டு செயலகங்களிலிருந்தும் மாதாந்த எரிபொருள் படியாக ரூபா 67,984 தொகை மேலதிகமாக பெறப்பட்டிருந்தது.

### 3.9 நட்டம் மற்றும் இழப்பு

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டம் மற்றும் இழப்பு தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நட்ட இழப்பு ஏற்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிவதற்கு முன்னர் அது தொடர்பாக பூரணமான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 2,635,744 கூட்டுத்தெளகயான 10 நட்ட இழப்புக்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 44,104 கூட்டுத்தொகையான 03 நட்ட இழப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 109(1)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.10 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 4 | 4 | - | - |
| (ii) | மூன்றாம் நிலை | 93 | 64 | 29 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,005 | 776 | 232 | 3 |
| (iv) | ஆரம்ப நிலை | 108 | 109 | 6 | 7 |
| | ஏனையவை | 32 | 8 | 24 | - |
| | மொத்தம் | 1,242 | 961 | 291 | 10 |